2018 ஜனவரி 10]

அறிவித்தபடி, இந்த ஆண்டு 12+30 என மொத்தம் 42 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களை 42 கோடி ரூபாய் செலவில் இன்னும் ஒரு மாதத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைக்கவிருக்கிறார்கள். கடந்த ஆண்டு வைக்கப்பட்ட பல்வேறு உறுப்பினர்களுடைய கோரிக்கைகளையெல்லாம் பரிசீலனை செய்து, 42 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களை இன்னும் ஒரு மாதத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைப்பார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற நொளம்பூர் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு அரசு கனிவோடு உரிய ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

வினா வரிசை எண் 18, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

18—

புதிய வருவாய் கோட்டம்

***22869—திரு. சு. ரவி:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் கோட்டம் உருவாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கின்றேன். தமிழக மக்களுக்காக தன்னையே*

அர்ப்பணித்திருக்கின்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி தமிழர் குலச் சாமி அம்மா அவர்களை வணங்குகின்றேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியிலே அன்னை தமிழகத்தை முதன்மை மாநிலமாக உருவாக்கிட, இரவைப் பகலாக்கி உழைத்து வருகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகின்றேன்.

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் மற்றும் நெமிலி வட்டங்களை இணைத்து, அரக்கோணத்தைத் தலைமையிடமாகக்கொண்டு, புதியதாக வருவாய் கோட்டம் உருவாக்க, குறைந்த அளவு 1,000 சதுர கிலோ மீட்டர் ஆட்சி எல்லை பரப்பளவு தேவைப்படுகிறது. மக்கள் நலன் காத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு முழுவதும் பாரத ரத்னா புரட்சித் தலைவருடைய நூற்றாண்டு விழாவிலே பல்வேறு நலத் திட்ட உதவிகளை வழங்கி வருகின்றார்கள். அந்த வகையில் வேலூர் மாவட்டத்திலே நடைபெற்ற புரட்சித் தலைவருடைய நூற்றாண்டு விழாவிலே, அரக்கோணத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் கோட்டம் அமைக்கப்படுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு செய்திருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆணையைப் பெற்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணாவின் இலட்சியங்களை நிறைவேற்றியவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய இலட்சியங்களை நிறைவேற்றியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இலட்சியங்களை இன்றையதினம் நிறைவேற்றி வருகின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய பணிவு கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2018 ஜனவரி 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட அரக்கோணம் நகரம், சென்னைக்கு மிக அருகில் மிகவும் வளர்ந்து வரக்கூடிய நகரமாகும். நகரத்தையொட்டி இந்திய கப்பல் படை தளம், மத்திய பாதுகாப்புப் படை, தேசிய பேரிடர் மேலாண்மை மையம் போன்ற மிகப் பெரிய மத்திய அரசு நிறுவனங்களும், மாவட்ட காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் அலுவலகமும், சார்பு நீதிமன்றமும் அரக்கோணம் நகரிலே இயங்கி வருகின்றன. இங்கிருந்து ராணிப்பேட்டை கோட்டாட்சியர் அலுவலகத்திற்கு செல்லவேண்டுமென்றால் 100 கிலோ மீட்டர் பயணிக்க வேண்டிய நிலை உள்ளதால் வயதானவர்கள், ஏழையெளிய மக்கள், பெண்கள் எல்லாம் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, அரக்கோணம் நகரைத் தலைமையிடமாகக் கொண்டு அரக்கோணம் நகரம், நெமிலி வட்டம், சோளிங்கர் பகுதியைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்த்து புதியதாக வருவாய் கோட்டம் உருவாக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சரிடத்திலும், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களிடத்திலும் கோரிக்கை வைக்கப்பட்டு, வேலூரில் நடந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரக்கோணம் நகரிலே வருவாய் கோட்டம் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றதொரு நல்ல அறிவிப்பை வழங்கியுள்ளார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதனை நிறைவேற்றித் தருகிறேன் என்ற பதிலைச் சொல்லியிருக்கிறார்கள். அரக்கோணம் தொகுதி மக்கள் எப்போது அந்த வருவாய் கோட்டம் உருவாக்கப்படும் என்று ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், எந்தக் கால அளவிற்குள் வருவாய் கோட்டம் அமைக்கப்படும் என்று அறிவித்தால் நன்றாக இருக்கும். அவ்வாறு அறிவிப்பார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையினுடைய சேவையை மேம்படுத்தவும், மக்களுக்கு விரைவான சேவையை அளிக்கவும், வருவாய்த் துறையை மக்கள் எளிதில் அணுகவும் முன்மாதிரியான

நடவடிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் உள்ள மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுத்துவருகிறது என்பதை மன்ற உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள். அந்த அடிப்படையிலே, வருவாய் கிராமங்கள் மற்றும் நிலப்பரப்பின் அடிப்படையிலே வட்டங்கள் மற்றும் கோட்டங்கள் பிரிக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தப் புள்ளிவிவரங்கள், ராணிப்பேட்டை வருவாய் கோட்டமானது தற்போது ஆற்காடு, வாலாஜா, நெமிலி மற்றும் அரக்கோணம் ஆகிய வருவாய் வட்டங்களை உள்ளடக்கி இயங்கிவருகிறது. இவற்றிலே ஆற்காடு வட்டம் 102 கிராமங்களையும், 464.54 சதுர கிலோ மீட்டர் பரப்பளவையும், 2,18,849 மக்கள்தொகையையும் உள்ளடக்கியுள்ளது. அதேபோல, வாலாஜா வட்டம் 83 கிராமங்களையும், 484.57 சதுர கிலோ மீட்டர், பரப்பளவையும், 3,60,328 மக்கள்தொகையையும் உள்ளடக்கியுள்ளது.

முற்பகல் 11–05

மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று அரசாணை நிலை எண் 65, வருவாய்த் துறை, நாள் 9–2–2016–ன்படி அரக்கோணம் வட்டத்திலிருந்து நெமிலி பிரிக்கப்பட்டு, 27–2–2017 அன்று முதல் புதிய வட்டமாகச் செயல்பட்டு வருகிறது. அவ்வட்டம், 77 கிராமங்களையும் 432.04 சதுர கிலோ மீட்டர் பரப்பளவையும், 2 இலட்சத்து 462 மக்கள்தொகையினையும் உள்ளடக்கியது. எஞ்சிய அரக்கோணம் வட்டம் 68 கிராமங்களையும், 411.34 சதுர கிலோ மீட்டர் பரப்பளவையும், 3 இலட்சத்து 8 ஆயிரத்து 459 மக்கள் தொகையினையும் உள்ளடக்கியது. ஆகவேதான் புதிய வருவாய்க் கோட்டம் உருவாக்க குறைந்தளவு ஆயிரம் சதுர கிலோ மீட்டர் ஆட்சி எல்லைப் பரப்பளவாகவும், குறைந்தளவு 4 இலட்சம் முதல் அதிகளவு 15 இலட்சம் மக்கள்தொகையும், குறைந்தளவு 100 கிராமங்களும், குறைந்தளவு இரண்டு வட்டங்களும் இருக்க வேண்டும். ஆகவே, அரக்கோணம் மற்றும் நெமிலி வட்டங்களை இணைத்து, அரக்கோணத்தைத் தலைமையிடமாகக்கொண்டு புதிய வருவாய் கோட்டம் அமைக்கும்பட்சத்திலே அவற்றின் பரப்பளவு குறைந்தளவு ஆயிரம் சதுர கிலோ மீட்டர் தேவைப்படுகிற அந்த வரையறையைப் பூர்த்தி செய்வதற்காக இன்னும் அதிலே பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன. அந்த வரையறைகள் எல்லாம் முடிந்ததற்குப் பின்னாலே, மாண்புமிகு

2018 ஜனவரி 10]

முதலமைச்சர் அவர்கள் அந்தக் கோரிக்கையைக் கனிவோடு பரிசீலனை செய்வதாக பாரத ரத்னா புரட்சித் தலைவர் அவர்களுடைய நூற்றாண்டு விழாவிலே அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, அவருடைய அறிவிப்பிற்கிணங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

19—

அச்சகத்திற்கு புதிய கட்டடம்

***12275—திருமதி எஸ். விஜயதரணி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தொகுதி, களியக்காவிளை பேரூராட்சி, படந்தாலுமூடு தொழில் கூட்டுறவுச் சங்க அச்சகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தமிழக மக்களின் தாயாகவும், ஒன்றரை கோடி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களுடைய இதய தெய்வமாக விளங்கி வருகின்ற எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் போற்றி வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய இலட்சியங்களைத் தொடர்ந்து நிறைவேற்றி வருகின்ற மாண்புமிகு